DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC .134/2021

Prosecution witness – PW.1

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு.திருக்காயுதம் | Caste: | |
| Father's Name | : முனியாண்டி | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

03.06..2026 – 11.35 AM

எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>:–

1. நான் வளையங்குளத்தில் குடியிருந்து எனக்கு உடல்நிலை சரி இல்லாததால் வேலை எதுவும் செய்யவில்லை. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்து ஊர்க்காரர். எனக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எவ்வித முன்விரோதமும் கிடையாது. சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் இரவு 09.00 மணியளவில் எங்கள் ஊரில் உள்ள அரசு பள்ளிக்கூடம் அருகே நான் நின்று கொண்டிருந்த போது 10 க்கும் மேற்பட்ட நபர்கள் கூச்சலிட்டு சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள்.

2. நான் கூட்டத்திற்குள் சென்று பார்த்தபோது கூட்டத்தில் இருந்த யாரோ என்னை கீழே தள்ளிவிட்டார்கள். நான் கீழே விழுந்ததில் எனக்கு லேசான காயம்பட்டது. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு கோவிலாங்குளம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். இது குறித்து கோவிலாங்குளம் போலிசாரிடம் சொன்ன போது போலிசார் என்னிடம் ஒரு வெள்ளை பேப்பரில் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் மனுவில் என்ன சங்கதிகள் உள்ளது என்று எனக்கு தெரியாது. மேற்படி **கையொப்பம் அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதியளிக்கப்பட்டது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-

1. 15.06.2021ம் தேதி இரவு 09.00 மணியளவில் நான் பள்ளிக்கூடம் முன்பு நின்று கொண்டிருந்த போது ஆஜர் எதிரி திருப்பதி மற்றும் பொன்னம்பலம், முருகன், சண்முகநாதன் ஆகியோருடன் நின்று கொண்டு என்னை வழிமறித்து ஆபாசமாக பேசி அவரது கையால் அடித்து கீழே தள்ளி எனது நெஞ்சு, வயிறு பகுதியில் காலால் மிதித்து என்னை தள்ளி இழுத்ததில் எனக்கு சீராய்ப்பு காயம் ஏற்பட்டதாகவும் அப்போது மேற்படி எதிரியுடன் நின்று கொண்டிருந்த மூவரும் சண்டையை விலக்கிய போது எதிரி என்னை கொலைமிரட்டல் மிரட்டல் விடுத்ததாக புகார் மனுவிலும் போலீசார் விசாரித்தபோதும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எனக்கு உறவினர்கள் என்பதால் எதிரிகளுடன் சமாதானம் செய்து கொண்டு வழக்கிலிருந்து எதிரிகளைக் காப்பாற்ற உண்மை சம்பவத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.03 18:13:27 +0530